1986 நவம்பர் 17]

வரி என்பதன் பேரால் ரூ. 8½ கோடியும், மது வகை மீது கூடுதல் விற்பனை வரி என்பதன் பேரால் ரூ. 9 கோடியும் அரசுக்குச் சேர்ந்திருக்கிறது. இது போக ரூ. 75 லட்சம் 1985-86 ஆம் ஆண்டில் லாபம் கிடைத்திருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் தனியார்கள் ஏலம் எடுத்து விட்டு அவர்கள் அதற்குரிய பணத்தை அரசுக்குச் செலுத்தாமல் சால்ஜாப்பு செய்து அரசாங்கத்தை ஏமாற்றி, சாராயத்தை விற்றுக் கொண்டிருந்தார்கள். அதனால் அரசாங்கத்திற்கு குறைந்த வருவாய் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு கடைகளை ஏலம் எடுக்காமல் தவறான முறைகளைப் பயன்படுத்தி தனியார் சாராயம் விற்பனை செய்து லாபம் அடைகிறார்கள். எனவே அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்து அதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராய விற்பனை நடத்துவதைத் தடுப்பதன் மூலம் கடந்த மாதம்—முந்தைய மாதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது—அரசாங்கத்திற்கு ஒரு கோடி ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் துறையில் பட்டாசுத் தொழில்.

39—(*வினா எண். 4870) திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டாசுத் தொழிலை அரசே ஆரம்பித்து அதனை ஏற்றுமதி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாசு வெடிப்பதைப் போல் பதில் வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அது புஸ்வாணம் போல் இருந்து விட்டது. இருப்பினும் நம்பிக்கை ஒளியை எதிர்பார்க்கிற வகையில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தமிழகத்தில் உற்பத்தியாகும் பட்டாசுகள் இந்தியாவில் மட்டுமல்லாமல், அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. சாத்தூர், சிவகாசி, கோயில் பட்டி போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் பட்டாசு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே இந்த மக்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து கூட்டுறவு சங்கங்கள் அமைத்து அதன் மூலமாக பட்டாசுத் தொழிலை ஊக்குவிக்கும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 17

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியிலும் மற்றப் பகுதிகளிலும் பட்டாசுத்தொழில் இன்றைக்கும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 261 பட்டாசுத் தொழிற் கூடங்களை தனியார் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தனியார் நடத்துகிற தொழிற் கூடங்களில் மிகக் கடுமையான போட்டி இன்றைக்கு நிலவி வருகிறது. இந்த நிலைமையில் மேலும் கூட்டுவு சங்கங்கள் மூலமாக அவர்களை ஒன்றுபடுத்தி அதன் மூலம் பட்டாசுத் தொழிலை நடத்தலாம் என்று அரசு ஏற்க வில்லை.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இப்போது வெடிகுண்டு புரளிகள் அதிகமாக இருக்கின்றன. எங்கு வெடிகுண்டு வெடித்தாலும் அவற்றை கண்காணிக்கவும் அவற்றை ஆராய்வதற்கும் தனியார் துறையிலுள்ள வல்லுநர் களைத்தான் அழைத்து வந்து அரசு ஆவன செய்து கொண்டிருக் கிறது. இந்த நிலையைக் கருதி அந்த வல்லுநர்களை வைத்து நல்ல முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பட்டாசுத் தொழிலை நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆங்காங்கே அதிக மான அளவில் வெடி விபத்துக்கள் ஏற்படுவதுபற்றிக் குறிப் பிட்டார். அந்த வெடிகள் எல்லாம் சிவகாசியில் உற்பத்தியாவ தாக மாண்புமிகு உறுப்பினர் கருதக்கூடாது. அங்கு உற்பத்தி செய்யப்படுகிறவைகள் விழாக்களுக்காக வெடிக்கப்படுகின்ற மத்தாப்பு வெடிகள் போன்றவை. அதற்காக தனியாக அரசே நடத்த வேண்டுமென்று விரும்புவது சரியாக இருக்காது. ஏறக் குறைய ரூபாய் 20 கோடி அளவில் இருபத்தைந்தாயிரம் டன் அளவிற்கு பலதரப்பட்ட பட்டாசுகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாட்டிலும் மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வரு கின்றன.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாசு-வெடி செவிப்பறைகளைக் கிழிக்கக் கூடிய அளவிற்கு வெடிக்கின்றன. ஆகவே அதன் தரத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? மேலும் பட்டாசுத் தொழிலில் சிறுவர்கள் வேலை செய்வதால் அவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே குறிப்பிட்ட வயதுள்ளவர்கள் தான் அந்தத் தொழிலைச் செய்ய வேண்டுமென்ற வரையறையை அரசு விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 17]

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: அரசாங்கம் இப்போதே பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. அந்தக் கட்டுப்பாட்டுக்குள்தான் இப்போது உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தொழிலில் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவதில்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 261 தனியார் நிறுவனங்களில் செய்யப்படுகிற இந்த பட்டாசுகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங், தாய்லாந்து, தைவான், ஜப்பான் போன்ற நாடுகளில் உற்பத்தி செய்கிறவர்களுக்கு எக்சைஸ் வரி மிகக் குறைவாக அல்லது வரியே இல்லாத அளவிற்கு இருப்பதால் நாம் வழக்கமாக விற்றுக் கொண்டிருக்கிற நாடுகளிலேகூட முன்பு போல இப்போது விற்க முடியவில்லை என்று தொழிற்சாலைகளை நடத்துகிறவர்கள் கூறுகிறார்கள். எனவே இந்த எக்சைஸ் வரியைக் குறைக்க மாநில அரசு வேண்டிய பரிந்துரையை மத்திய அரசுக்குச் செய்து நடவடிக்கை எடுத்து நம்முடைய தொழிலை வளர்க்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எக்சைஸ் டியூட்டி பற்றிக் கேட்டார்கள். பட்டாசுத் தொழிலுக்கு எக்ஸைஸ் டியூட்டி கிடையாது. அதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கம் சொல்லுவார்கள்.

திரு டி. என். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்டாசுத் தொழிலில் ஏறக்குறைய 80 சதவீதம் 'சைல்ட் லேபர்' என்று சொல்லக்கூடிய சிறுகுழந்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். இதைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு சட்டங்களை ஏற்படுத்தினாலும் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தங்கள் குடும்பச் சூழ்நிலையின் காரணமாக பொருளாதார சூழ்நிலையின் காரணமாக தவிர்க்க முடியாமல் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் குழந்தைகளைக் கட்டாயக் கல்வித் திட்டத்தின்கீழ் கொண்டு வந்து அந்தக் குழந்தைகளை அரசுத் தேர்வுக்குத் தயார் செய்து அதிலே குறிப்பிட்ட சதவீத குழந்தைகள் தேர்வு பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினால் தவிர அக்குழந்தைகளுக்கு கல்வி பாதுகாப்புக் கிடைக்காது என்பதை அரசு உணர்கிறதா என்றும், அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிலில் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவதை அரசு உணர்ந்திருக்கிறது. தகுதியான, தேவையான, முறைப்பாடான கட்டுப்பாடுகளை அரசு விதிக்கும்.